சிந்தனை
தொகுதி VII இதழ் I, II & III - 1995

# சமய அறிவில் தமிழ்க் கல்வியின் பங்கு

கலைவாணி இராமநாதன்

## அறிமுகம்

இறைவனுடன் தொடர்புடைய துறை சமயம் என்ற பெயரால் குறிக்கப்படும். மனித இனம் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் சமய உணர்வு, அறிவு இரண்டும் இருப்பதனைக் காணலாம். "சமையம் என்ற சொல் சமைக்கப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது எனப் பொருள்தரும்"[1] சமைத்தல் என்றால் உணவினைப் "பக்குவப்படுத்தல்" எனப்படும். பச்சை மாமிசம் உண்டு வேட்டைத்தொழில் புரிந்த ஆதிமனிதரை "நாகரிகமற்றவன்" எனவும் சமைத்து உணவு உண்ணும் முறையறிந்து வளர்ந்த பிற்கால மனிதரை "நாகரிகமுடையவர்" எனவும் மனிதப் பண்பாட்டு வரலாறு குறிப்பிட்டுள்ளது. உணவினைப் பக்குவப்படுத்தும் நெருப்பினைப் போன்று மனித மனத்தினைப் பக்குவப்படுத்தும் ஞான ஒளியை அடைய வழிகாட்டும் நெறிமுறைகள் "சமயம்" எனப் பெயர் பெற்றதெனலாம்.

ஆங்கிலத்தில் சமயத்தைக் குறிக்க Religion என்ற சொல் வழக்கிலேயுள்ளது. இச்சொல்லானது லத்தீன் மொழியில் உள்ள றெல்-இஜியோ (Rel-igio) என்ற சொல்லிலிருந்து அமைக்கப்பட்டது. மனிதனுக்கும் மனிதனுருள் உயர்ந்த ஒருவனுக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் காட்டுவது என்பது இதன் பொருளாகும்.[2] எந்தமொழியாயினும் எந்தச் சொல்லாயினும் இறைமையுடன் தொடர்புகொள்ளும் நெறி ஒன்று உலகெங்கும் பரவியிருப்பதில் ஐயமில்லை. எல்லாச் சமயங்களும் இறைவனை மூலமாகக் கொண்டாலும் கடவுள் நம்பிக்கை இல்லாத கொள்கைகளும் சமயம் என்ற பெயரும் சித்தாந்தம் என்ற பெயரும் தாங்கி நிலவுவதனைக் காணலாம். உலகாயதம், பௌத்தம் முதலியன இத்தன்மை கொண்டவையாகும். சமயத்தின் இறுதி வளர்ச்சியாக இறைவன் எல்லா உயிர்கட்கும் பொது என்ற எண்ணம் இவ்வாறு தோன்றி வளர்ந்திருக்க வேண்டும்.[3] "ஆயிரம் தெய்வம் உண்டென்று தேடியலையும் அறிவிலிகாள் - பல்லாயிரம் வேதம்

அறிவொன்றே தெய்வம் உண்டாம் எனல் கேளீரோ?" என்ற பிற்கால பாரதியாரின் தமிழ்க்கவிதை "பிரக்ஞானம் பிரமம்" என்னும் "அறிவே பிரமம்" எனப்படும் வேதவசனங்களின் தாற்பரியமாகவே மலர்ந்தது. தமிழ் நூலான திருக்குறளும் "மெய்ப்பொருளைக் காண்பதே அறிவு" எனக் கூறியதிலிருந்து தமிழ்நூல்களில் கல்வியை வழங்கும் அறிவுக்கொள்கை யானது இங்ஙனம் சிறப்பிடம் பெற்றிருப்பதை எளிதில் உணர முடியும்.

## பழந்தமிழ் நூல்களில் காணும் செய்திகள்

தமிழ் நூல்கள் ஆதியிலிருந்து கல்விக்குரிய கடவுளைப் பெண்ணாகப் படைத்தது மட்டுமன்றி அத்தெய்வத்தின் உயரிய படைப்பையும் அறியாமை என்ற இருளினை நீக்கி அறிவொளியை ஏற்றி வைக்கும் இலட்சியப் படைப்பாகவே உருவகித்தன. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் சரஸ்வதி தேவியின் திருவுருவமானது அறிவென்னும் செம்பொருளைப் பெற்றவர்களது உருவமும் உள்ளமும் வெண்மையும் தூய்மையுமாக அமையப்பெற வேண்டும் என்பதனை உணர்த்துவதாயுள்ளது. அறிவினால் மனிதன் மனப் பக்குவமடைந்து சிறந்த பண்பாளனாகத் திகழவேண்டுமென்ற லட்சிய உணர்வினை சங்ககாலம் முதல் தற்காலம் வரையும் எழுந்துள்ள பல்வேறு துறைகள் சார்ந்த தமிழ்நூல்களிலும் பரக்கக் கண்டு கொள்ளலாம்.

தமிழ் நூல்களது அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் பல்வேறு அமிசங்கள் வெவ்வேறு காலங்களில் போற்றப்பட்டு வந்துள்ளன. இந்துசமயத்தின் எல்லா அமிசங்களும் எல்லாக் காலங்களிலும் இருந்தன என வாதிப்பதுமுண்டு. தமிழ் நூல்களிலோ ஒவ்வோர் காலப்பகுதியிலும் ஒவ்வோர் அமிசங்கள் வளர்ந்து வந்துள்ளன. சங்ககால பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்களில் சடங்குகளும் விழாக்களும், தெய்வங்கள் பற்றிய அறிவும் கூடுதலாகக் கூறப்பட்டிருக்கின்றன. போர்க் காலத்தில் இறந்த மக்களின் பிணங்களை சுடுகாட்டிலே உண்ணும் பெண்கள் முதல் குறமகள் கண்ணில் ஏற்படும் ஊறுகளைத் தீர்ப்பதற்கு நெய்யுடன் வெண்கடுகைத் தூவும் கண்ணூறு,4 என்பது பற்றிய செய்திகள் வீட்டிலிருந்து புறப்பட்டுத் திரும்பி வரும்வரை நல்நிமித்தம் பார்க்கும் முறைகள்5 யாவும் நற்றிணை, நெடுநல்வாடை, புறம், குறுந்தொகை போன்ற பல நூல்களிலும் விரவி வருகின்றன. குறிசொல்லுதலும், அதற்கான சடங்குவகைகளும் கூட அகப்பொருள் இலக்கியத்தில் இருத்தலை குறுந்தொகை பொருநராற்றுப்படை6 என்பன பெருவாரியாக எடுத்துரைத்துள்ளமை அக்காலத் தமிழ் நூல்களின் கல்விச் சிந்தனையில் சமயம் பெற்றுள்ள சிறப்பினை நடைமுறை வாழ்க்கையூடாக அவை பிரதிபலிக்கச் செய்திருப்பதனை அவதானிக்க முடியும்.

சங்ககாலம் பெருவழக்காயிருந்ததில் வெறியாடல் பற்றி இலக்கண நூலான தொல்காப்பியம் கூறுமிடத்து, இந்த ஆட்டத்தில் கையிலே வேல் கொண்டு ஆடுவதால் வேலன் எனப் பெயரிய ஒருவன் முருகனை வாழ்த்துவான்7 எனக் குறிப்பிடுதல் தமிழ் கல்வியறிவின் ஊடாகக் கடவுளர்க்கு கூத்து, ஆட்டம் உகந்தது என்ற அறிவினையும் அது

அறிவிப்பதாயுள்ளது. வீரர்கள் நினைவாக நடுகல் இடப்பட்டு வழிபடும்முறையினையும் பட்டினப்பாலை, ஐங்குறுநூறு முதலியனவும்8 கல்தெய்வத்தை வழிபடுதலை அகமும்9 கற்களைவிட்டு நீங்கிய தெய்வங்களின் பாழடைந்த அம்பலத்தைப் பற்றிப் புறமும்10 கூறுவதானது சமய நெறியிலே உருவ வழிபாடு பற்றிய அறிவினைத் தருவாதாகவும் அமைந்துள்ளது. இவைதவிர முருகன்11 திருமால்12 கொற்றவைக்கடவுள்13 பற்றிய செய்திகளுடன் சிவனைப்பற்றிய வர்ணனைகளையும் இந்நூல்கள் பெருமளவிலே கொண்டுள்ளன. சிவம் ஒரு நிலத்திற்குரிய கடவுளாக இல்லாமல் ஐவகை நிலப்பிரிவினர்க்குமுரிய பொதுக் கடவுளாக பெயர் சுட்டியறியப்படாத பெருந்தெய்வ நிலைப்பாட்டிலே வைத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சைவசித்தாந்தப் பதிக்கொள்கையின் அடிப்படைகள் பல அவற்றிலே கருக்கொண்டுள்ளன. ஐம்பூதங்களைத் தோற்றுவிப்பவன்,14 நஞ்சை உண்டவன்15 இடபக்கொடி16 யுடையவன், ஆலமர் செல்வன்17 முக்கட் செல்வன்18 காலக் கடவுள்19 இமையத்தில் உறைபவன்20 என்று இன்னோரன்ன சிவனது வர்ணனைகள் மட்டுமன்றி; இவ்விதமான வர்ணனைகளைக்கொண்ட இறைவன் கடவுள் என்ற பொதுப் பெயரால் பல இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளான். இதற்கான சான்றுகளை அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, மலைபடுகடாம் என்பன போன்ற நூல்களிலே பெருமளவு இடங்களில் அவதானிக்க முடியும்.21

இவ்வாறாக சித்தாந்தக் கடவுட் கொள்கையினை நெறிப்படுத்தும் ஆரம்பக் கருவூலங்கள் பற்றிய அறிவினைத் தருவனவாக பழந்தமிழ் நூல்கள் பல விளங்குகின்றன. இச்சிவனார் பிறவாயாக்கைப் பெரியோன்22 என சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்பட்டு அன்னோன் இறைவன் என மணிமேகலையில் நிருபணம் செய்யப்பட்டவர். இத்தகைய கடவுட் சிந்தனைகளே காரைக்கால் அம்மையார் திருமூலர், திருவள்ளுவர் போன்றவர்களது தமிழ்நூல்களிலும் கடவுள், ஈசன், இறைவன், பெம்மான்-பெரியோன், அன்னவன் எங்கள் சிவன் அவன் என் சிந்தையுள் நிறைந்தவன் என தேவார திருவாசகங்கள் வரை தொடர்ந்து பேணப்பட்டு சித்தாந்த நூல்களில் தத்துவ சாஸ்திர முறைமைகளுடன் உறுதி செய்யப்பட்டன. இவ்வாறு சமயக் கல்வியிலும் சாத்திரக் கல்வியிலும் தமிழ் நூல்கள் நீண்ட பணியாற்றின.

## அறிவின் முனைவன்

இவ்விதமான சமயசிந்தனை அறிவாற்றலானது தொல்காப்பியர் காலம் முதல் வளர்ச்சி பெற்று வந்துள்ளமையினை அதன் செய்யுளில் 106வது நூற்பாவும், புறத்திணையில் 33வது நூற்பாவும் சான்றுபகருகின்றன.25 வினையின் நீங்கி விளங்கிய அறிவின்-முனைவன் கண்டது முதல்நூல் என்பதாலும் "ஆகம அளவை" நூல் பற்றி மணிமேகலையில் வரும் குறிப்புக்களினாலும் சிவாகமங்களது சமய அறிவு நிலை பற்றியும் இத்தமிழ் நூல்கள் சில குறிப்புக்களைத் தம்முள் கொண்டிருக்கின்றன எனக்கருதலாம். அறிவின் முனைவன்-இறைவன் என்ற தோன்றாப் பெயரால் குறிக்கப்பட்ட சிவன் பற்றிய செய்திகளைக் கூறுமிடத்து இக்கடவுளர்க்கு அந்திநேரம் செய்யப்பட்ட பூசைகள்,

சேரன் செங்குட்டுவன் சிவன் அருளால் பிறந்தவன் என்பது போன்ற குறிப்புக்கள், அவ்வரசனது சபையில் ஆடப்பட்ட சிவனாரின் கொடுகொட்டி நடனம் பற்றியும் சிலம்பு மணிமேகலை என்பவற்றிலே பல தகவல்கள் தரப்பட்டுள்ளன.[24]

இந்த நூல்களிலும் சிவன் என்ற சொல்லாட்சி இடம்பெறாவிட்டாலும் இதுவரை தமிழ்நூல்கள் கடவுள் என்னும் பொதுப்பெயரால் சுட்டப்பட்டு வந்த மக்களின் சமயம் சைவம் என மணிமேகலையில் தான் முதல் சான்று காணப்பட்டது.[25] இப்பாடற் பகுதியில் சிவனது ஐந்தொழில், முறைமை அவனது உலகாயு-உயிர்களால் கலந்துறையும் மாண்பு யாவும் சித்தாந்த மரபுவழி காட்டப்பட்டுள்ளது. சைவத்தினதும் சித்தாந்த வளர்ச்சியினதும் முன்னோடியாக தமிழ்க்கல்வியின் இக்காவிய நூல்களின் பங்களிப்பு அமைந்துள்ளது.

அறநீதிக் கருத்துக்கட்கும் சங்கமருவிய காலத்தமிழ் நூல்களில் பெருமளவு பங்களிப்புக் காணப்படுகின்றன. சிறப்பாக வேள்விகளில் உயிர்ப்பலி தவிர்க்கப்பட்டு கடவுள் வழிபாட்டிலே பூசை முறைகள் இடம்பெற்றன. அத்துடன் பழைய சமயக் கூறுகளை கைவிடாமலே புதிய பிரிவுகளையும் இணைத்துக்கொண்டு வந்தனர். இவற்றிலே பதினெண்கீழ்க் கணக்கு நூல்களின் பணி அளவிடற்கரியவை. அறநூல்களில் திருக்குறளுக்கு அதிக மகத்துவம் அனைத்து சமயத்தாராலும் வழங்கப்பட்டது. தமிழ் நூல்களின் கல்விப் பணியில் திருக்குறள், திருமந்திரம் முதலிய நூல்கள் கல்வி, கல்லாமை, அறிவுடைமை, மெய்யுணர்தல் போன்ற பகுதிகளில் சிறப்பாக சமய அறிவிற்கும், சமூக அறவியலுக்குமான பல நற்சிந்தனைகளை முன்வைத்தன. கல்வி என்பது அறிவைப்பெறும் வழி எனலாம். அறிவுக் கண்ணைத் திறப்பது கல்வி ஆதலால் "கண்ணுடையார் கற்றார்-கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார்" எனக் குறள் கூறிய உண்மையினை "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என ஔவை வாக்கும் ஆமோதித்தது. திருமந்திரமோ ஒருபடி இன்னும் மேற்சென்று "கணக்கறிந்து உண்மையைக் கண்டு அண்டநிற்கும் கணக்கறிந்தார் கல்வி கற்றாரே" என்றபடி. தத்துவங்களின் கணக்கறிந்து மெய்ப்பொருளை அடைதற்குரிய முறைமைகளைக் கற்றவரே கற்றறிந்தார் எனக்கூறியது. இதன் தாற்பரியமே பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு எனத் தமிழ்மறை உணர்த்தியது.

## அறிவில் காணும் இரு இயல்புகள்

அறிவு என்பது அன்பின் ஒரு பண்பு எனவும் விளக்கப்பட்டது. ஏனெனில் அறிவுடையோரிடத்து அன்பில்லாமை காணப்பட்டால் அதுவே அவர்களை அழிக்கும் கருவியாகவும் மாறிவிடுகின்றது. அறிவினால் ஆகுவதுண்டோ-பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக் கடை என்பது போல பிறரது துன்பத்தைத் தனக்கு வந்த துன்பமாக எண்ணி உதவ முற்படாதவர்களின் அறிவினால் என்ன பயன் என தட்டிக் கேட்கவும் தமிழ்ப் புலமை தயங்கவில்லை. அன்பிற்கும் அறிவிற்குமுள்ள பிணைப்பினை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர், அன்பே சிவமாவது யாரும் அறிகிலர் அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் அன்பே

சிவமாய் அமர்ந்திருப்பரே'' என திருமந்திரம் இச்சீரிய பண்பினை விளக்கியுள்ளது. அறிவானது கனிந்து அன்பாக முதிர்ச்சியடைவதனையே சமயத்திருநூல்கள் "ஞானம்'' அல்லது "பேரறிவு'' என அழுத்திக்கூறின. அதனால் அறிவு என்பது இலக்கியங்கள் அனைத்திலும் பேரறிவு-சிற்றறிவு எனவும் மெய்ஞானம் விஞ்ஞானம் எனவும் அறவியல்-அறிவியல் எனவும், ஆன்மீகக் கல்வி உலகியற்கல்வி எனவும் பலபெயர்களில் இரு பிரிவிலே பேசப்பட்டுள்ளது. இவ்வுண்மையினை வேதங்கள் வித்தை - அவித்தை எனவும் உபநிடதநூல்கள் பரஞானம் - அபர ஞானம் எனவும் வகுத்து விளக்கின. பரஞானம் என்பது பதிஞானம் அல்லது சிவஞானம் என்பதாகவும் அபரஞானம் என்பது பசு ஞானம், பாசஞானம் எனப்படும் எனவும் சைவசித்தாந்த சாத்திரங்கள் அறிவுக்கொள்கையினை மேலும் தெளிவுபடுத்தின. இவற்றிலே பரஞானம் மெய்ஞானமாகவும், அபர ஞானம் விஞ்ஞானமாகவும் காலப்போக்கில் விளக்கம் பெற்றதாகக் கொள்ளலாம்.

இங்ஙனமாகக் கல்வி என்பது சாதாரண அறிவு அல்லது சிற்றறிவு எனவும், ஞானம் எனப்படுவது பேரறிவாகவும் சான்றோர்களால் உணர்த்தப்பட்டுள்ளது. கல்வி அறிவானது சமய ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து மனப்பக்குவம் அடைந்தோரிடத்து மெய்ஞானமாகப் பரிமளிப்பதுமுண்டு - பரிமளிக்காது போவதுமுண்டு. ஆதலால் கல்விகேள்விகளில் மேதைத்தவம் அடைந்தோரை பேரறிஞர், விஞ்ஞானிகள் எனவும் (Experts) ஞானத்தில் பரிபக்குவம் அடைந்தோரை தீர்க்கதரிசிகள் மெய்ஞானிகள் எனவும் உலகத்தோர் வேறுபடுத்திக் காட்டியதில் இருந்து இவ் உண்மையினை உணரலாம். ஒருமைக் கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து (394) என்பது போல தமிழ்நூல்களின் பாரம்பரியக் கல்விக் கொள்கையானது பலபிறவிகளின் வாயிலாகப் பெற்றுப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் ஒரு நெறிமுறையினைக் கொண்ட ஒரு கொள்கையாகப் பேணப்படுகின்ற ஒரு மரபு வளர்ச்சியடைந்துள்ளது.

### உண்மைக் கல்வியின் குறிக்கோள்

உண்மைக் கல்வி என்பது மனிதனது உள்ளத்திற்கும் அறிவாற்றலுக்கும் ஆலோசனை, நெறிப்படுத்தல் என்பனவற்றினை வழங்கித் தூய சாத்விக இன்பத்தை ஈட்டுதற்கு அழைத்துச் செல்வதாகும். பிறருடன் பகிர்ந்து கொள்வது, பிறருக்குச் சேவை செய்வது இவையே வித்தையின் பிரதான நோக்கங்களாகும். மரங்கள் பழங்களைப் பிறருக்கு வழங்கும், நதிகளும் தாமே நீரைப் பருகாது பிறருக்குத் தாகசாந்தி செய்யும். பசுக்கள் பாலை கன்றுக்கும் மக்களுக்கும் உணவாக வழங்கும். நிலமானது பயிரை விளைவித்துத் தானே அனுபவியாது பிறர் பொருட்டே அவ்வுணவினையும் உதவிவருகின்றன. இவ்வாறாக இயற்கையிலே எல்லாம் சேவை மனோபாவத்தையும் துறவின் பற்றற்ற உயர்தாரண்மைக் கொள்கையினையுமே கற்பிப்பனவாகவுள்ளன. அவ்வாறே கல்வியறிவினைப் பெற்றவர்கள் சுயநலவிருப்புக் கொள்ளாது சேவை தொண்டு எனப்படும் பரந்த நோக்கிலே அவற்றினைப் பிறருக்கும் வழங்க முன்வர வேண்டும். கல்வியறிவு அற்றவர் களிடமே சேவை மனப்பான்மை இருக்கும் போது கற்றவர்களிடமே அது அருகிப் போவது எவ்வளவு வருந்தத்தக்கது என்பதனை

கற்றவர்கள் எண்ணிப்பார்ப்பதவசியமாகும்.

அடுத்து கல்வி என்பது பணிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும். "புலி பதுங்குவதும் வில் வளைந்திருப்பதும் சான்றோர் பொறுமையுடன் இருப்பதும் நல்லதற்கல்லவாம்" என அடக்கத்தின் வலிமையினை விவேக சூடாமணி என்ற நூல் நயம்பட எடுத்துரைத்திருக்கின்றது. இன்றைய கல்விநிலை தற்பெருமையையும், அடக்கமின்மையையும் பொறாமையினையும் உற்பத்தியாக்கியிருக்கின்றது. வித்-என்றால் ஒளி, யா-என்றால் தருதல் கல்வி என்பதே அக இருளைப் போக்கி-அறிவொளியை தருதல் எனப் பொருள்படுகின்றது. தற்காலக் கல்விமுறையோ கற்றுச் செல்வோரை அவர்களது புலனின்பங்கட்கு அடிமையாக்கி வருகின்றது. புலமையறிவு மட்டும் உயர்நிலை மனித விழுமியமாகாது. உயிர்வாழ்தல் பொருட்டு சம்பாதிக்க அது உதவலாம். ஆனால் அது வாழ்வின் சவால்கட்கும் முகம் கொடுக்கக் கூடியவாறு அறம், ஒழுக்கம் சார்ந்த வழிகளில் ஒருவரைத் தயார் செய்ய உதவுவதில்லை எனச் சான்றோரால் குற்றம் சாட்டப்படுகின்றது. இன்றைய கல்வி அதிக பொருட்செலவுடையதாகவும் விரிவானதாகவுமுள்ள அதேவேளை அறநீதிப் பண்புகளை போதியளவு ஊக்கப்படுத்துவதாயில்லை. அறஒழுக்கங்களை நூல்களில் பெற்று விடமுடியாது. நடத்தையே மிகமுக்கியமானது. மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தி மிக இன்றியமையாதது. ஒழுக்கத்தை சந்தையிலே வாங்க முடியாது - அது இதயத்திலிருந்து பிறக்கவேண்டும்.

கல்வியின் இலக்கு ஒழுக்கம், அறிவின் இலக்கு அன்பு. இவை வெறும் புத்தக அறிவில் மட்டும் சாத்தியப்படாது கல்வி என்பது வாழ்வதற்கான சம்பாத்தியம் என்ற நோக்கத்தை கைவிடும் போதுதான் மனிதன் அன்பெனும் ஆன்மீக முன்னேற்றத்தை அடையமுடியும். கல்வி வாழ்க்கையாக இருக்க வேண்டுமேதவிர - பிழைப்பிற்காக மட்டும் இருத்தலாகாது. என்பதே மெய்ஞானக் கல்வியின் அடிப்படைக் குறிக்கோளாகும். அறிவு வெறும் புத்தக இயல் அன்று. அது புத்தக உள்ளடக்கத்தை மூளைக்கு மாற்றும் நடவடிக்கையுமன்று. உள்ளத்தை உன்னதமாக மாற்றியமைக்கும் உயரிய நோக்கத்தைக் கொண்டதே உண்மைக்கல்வி. உண்மையறிவு என்பது ஒருபுறம் விஞ்ஞானத்தையும் மறுபுறம் ஆன்மீகம் அறவொழுக்கம் இவற்றிற்கிடையேயும் ஒருவித இசைவையும் தொகுப்பையும் ஏற்படுத்த வேண்டும். விஞ்ஞானத்தைக் குறித்து விளக்கத்தக்கவர்கள் அறிவில் தம்மை மேம்பட்டவர்களாக நினைக்கின்றார்கள். ஆனால் பௌதிக விஞ்ஞானத்திற்கு அப்பாலுள்ள அறிவினை விளக்க முற்படும்போதுதான் அறிவு முழுமையான பலனைத்தரும் பௌதிகவதீத ஞானமுடையதாக ஆக முடியும்.

விஞ்ஞான அறிவின் உபயோகம் ஐயத்திற்கடமற்றது. அதன் சரியான பிரயோகம் அறிந்து செயற்படும்போதே அதனுடைய பயன்பாடும் அறிவு விருத்தியும் உலகினர்க்குப் பயன்பாடுடையதாகும். விஞ்ஞானக் கல்வியிலும்சரி மெய்ஞானக் கல்வியிலும் சரி அன்பினை வளர்ப்பதே அதன் இலட்சியமாக அமையவேண்டும். பெற்றார், உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர், தெய்வம் என்றின்னோரன்ன வகையில் அன்பு செலுத்தலின் தொடர்ச்சியானது சரியான ஒழுக்க

நடத்தையை வளர்த்தெடுக்கும் உபாயமா கவும் அமைகின்றது. இன்றைய கல்வி முறையிலே பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை தளர்கின்றது. பக்தி உணர்வு தள்ளுபடியாகின்றது. இறுமாப்புணர்வு தீவிரமடைகின்றது. ஆசிரியர் மீதுள்ள கணிப்புத் தவறாகின்றது. கடவுள் பூஜைக்கு முக்கியத்துவம் குறைகின்றது. பாரம்பரியப் பண்பாடு புறக்கணிக்கப் படுகின்றது.27 அதனால் கல்வியின் உள்ளார்ந்த நிலைமாற்றம் என்பது புறப்பொருளாகமட்டும் அமையாது மனிதனை மேம்படுத்தும்-அகப்பொருளா கவும் பரிணமிக்க வேண்டும். உள்ளம், உடல், மனஎழுச்சி, ஆன்மீகம் உலகியல் என்ற அனைத்துப் பரிமாணங்களையும் மேம்படுத்தவல்ல ஆற்றலாக கல்வித் தரிசனம் அமையவேண்டும் என்பத னையே மேற்குறிப்பிட்ட தமிழ் நூல்களின் கல்விக்கொள்கையானது திட்டவட்டமாக எடுத்துரைத்திருக்கின்றது.

## சமயக் கல்வியிலும் விஞ்ஞான அடிப்படைகள்

சமயக்கொள்கைகள் விஞ்ஞான அடிப்படைகட்கு முரணானவை என்பது பலரது கொள்கை. விஞ்ஞானம் புறக் கருவிகளைக் கொண்டு பிரபஞ்சம் பற்றிய அடிப்படைகளை அளந்து பரிசோதனை கள் மூலம் விளக்கும் தன்மைகளைக் கொண்டது. சமயஞானம் அகக்கருவிக ளால் (அந்தக் கரணங்கள்) உள்ளுணர்வு என்னும் தொலைநோக்கி மூலம் பிரபஞ்ச அடிப்படைகளையும் அதன் உண்மைப் பொருளையும் அளவிட்டுக் காண்பிக்கின் றது. இருவகை ஞானத்திற்கும் பிரபஞ்ச ஆராய்ச்சியே மூலகாரணமாக இருக்கின் றது. விளக்க முறையிலேதான் அவரவர் அளவுகோல்களைப் பொறுத்து அவை வேறுபடுகின்றன. அறிவுக்கும் ஆராய்ச்சி க்கும் எல்லையுண்டு என விஞ்ஞானம் நம்புவதில்லை. குருட்டுக் கட்டளைகளை ஒப்புக்கொள்வதுமில்லை. புதிய அறிவு - புதிய அனுபவம் இவற்றினையே விஞ்ஞானம் வரவேற்கின்றது. தன்னைவிட அறிவாளி உண்டு என்ற அடக்கம், தன்னிடம் உள்ள குறைகளை மறைக்காத தன்மை, பிறரிடம் எதையும் கற்றுக் கொள்ளத் தயங்காத பண்பு, எளிமை இவைகளே உண்மை விஞ்ஞானியின் இயல்புகளாகும். ஆராய்ச்சி சுதந்திரத்தை மதிப்பதனால் அதிகாரபூர்வமான கட்டளை கள் என்னும் சமயத் திட்டத்தின் ஒரு பகுதி அத்தத்துவத்திற்கு முரணானது என்பதனை ஒப்புக்கொண்டேயாக வேண டும். ஆனால் சமய அறிவின் அடிப்படை யான மூலக்கல் காரணம் தோன்றாத பல கட்டளைகளாகவேயுள்ளன. விஞ்ஞான அடிப்படைகட்கு ரகசியம் என்பது முற்றிலும் முரணானது ஆகும்.

மேலும் விஞ்ஞானவிடயங்களில் உலகம் முழுவதுமே ஒப்புக்கொள்ளும் அச்ச உணர்வு ஒன்றுண்டு. சமய ஞானத்திலே இத்தகை அச்சம் கிடையாது. மாறாக ஆன்மவீரம் பளிச்சிடுவதனைக் காணமுடியும். குறைகளோ, தவறுகளோ இல்லை எனக் கூறப்படும் சமய நூல்கள் பற்றிய மதிப்பீடுகள் விஞ்ஞான அடிப்ப டைக் கல்வி முறைக்கு மாறுபட்டுத் தோன்றலாம். அனால் சமய அறிவின் உள்ளொளியினை குற்றங்குறைகளை யுடைய மக்கள் மனதிலே ஏற்றுவதற்கு அந்த ஒளி தொடர்பான அனுபவங்களை உருவாக்கும் எண்ணங்களையே சமய நூல்கள் உபதேசிக்கின்றன. இந்த உபதேசங்கள் குற்றம் குறையில்லாதன என நினைப்பதும் சரியல்ல. எல்லா இடங்களிலும் ஆய்வுகளும் சரியான

முறையைக்காட்டும் என்பதும் சரியல்ல. காலத்துக்குக் காலம் விஞ்ஞான உண்மைகளும் மாறுகின்றன. இம் மாற்றமே முன்னேற்றமாகும். அதுவே வளர்ச்சியின் ஏணிப்படியாகும். இத்தகைய ரீதியிலே விஞ்ஞானம் எவ்வளவு நலன்களை அள்ளித்தருகின்றதோ அந்த அளவிற்கு அத்தனை பயன்பாட்டிலும் ஒருசிறு தவறு ஒரு பகுதியில் நேர்ந்தாலும் அனைத்தையும் அழிவின் எல்லைக்கே மனித இனத்தைக் கொண்டுபோய் விடும். "ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய், அருள்தருவாய்" என்பது விஞ்ஞானப் பயன்பாடுகட்கும் பொருந்துவனவாகவே காணப்படுகின்றன. இறைமை பற்றி சமயமும் தமிழ் நூல்களிற் பெரும்பாலானவும் இதே இலக்கண மரபுகளுடன்தான் வரையறை செய்திருப்பதனை நோக்குமிடத்து நன்மை தீமை என்ற வேறுபாடுகள் இயற்கையிடத்து இருப்பதில்லை. அவை இயற்கையினைப் பயன்படுத்தும் மனிதமனதின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கின்றன என்ற உண்மை புலப்படும்.

பஞ்சபூதக்கோட்பாடுகளும் இதற்கு முரணானவையல்லவாம். உதாரணமாக அளவான மழை,-வளம் பெருக்கும், அளவுக்கு மீறிய மழை வெள்ள அபாயத்தை உண்டாக்கும். அளவான நெருப்பு சமையலைப் பதப்படுத்தும் அளவுக்கு மீறிய நெருப்பு வீட்டையும் கொளுத்திவிடும். அளவான காற்று உயிர்வாழ்விற்கு இன்றியமையாதது. அது அளவுக்கு அதிகமானால் பெரும்புயலாகி வாழ்க்கையில் அனர்த்தங்களையே ஏற்படுத்தும். அவ்வாறே பேனாவானது நல்லதையும் எழுதும் கெட்டவற்றையும் எழுதும். அது எழுதுகோலின் தவறு அல்ல. அதனைக் கையாளுவோரின் நோக்கத்திலேயுள்ள தவறாகும். சிந்தனை தவறானால் செய்கையும் தவறாகும் என்னும் மெய்ஞானக் கல்விமுறையின் அடிப்படை இலட்சியமே இதுதான். இந்த நிலைப்பாட்டிலே விஞ்ஞானமும் மெய்ஞானமும் அடிப்படையில் முரண்பட்டவையல்ல எனலாம்.

### ஒழுக்கவியல் அடிப்படைகள்

சமய அறிவின் உண்மையான உபதேசம் ஒழுக்கச் சீர்திருத்தமே தவிர கொள்கை உறுதிப்பாடு என்பதுமட்டுமல்லவாம். கொள்கைகளை வரையறுப்பதுடன் சமயப் பற்று முடிந்து விடுவதில்லை. வரையறை செய்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதே அதன் செயல் முறைத்திட்டமாகும். நாம் ஏறிச் செல்கின்ற வாகனம் எது என்பது முக்கியமல்ல. வாகனத்திலே வருகின்ற பொருளின் பெறுமதி எத்தகையது என்பதைப் பொறுத்தே வாகனத்திற்கும் பெருமை யுண்டாகும். மறைஞானசம்பந்தர் திண்ணைக்கட்டில் இருந்தார் உமாபதி சிவாச்சாரியார் எதிரே பல்லக்கில் அமர்ந்து வந்தார். மறைஞானிக்கு அது பல்லக்காகத் தெரியவில்லை. பட்டகட்டை யாகத் தெரிந்தது. உமாபதிசிவாச்சாரியாரால் திண்ணைக் கட்டுக்கும் மகிமை உண்டானது. விமானம் பயணிகளையும் ஏற்றி வருகிறது. குண்டுகளையும் ஏற்றி வருகிறது. வாகனத்தை உபயோகிக்கும் மனிதனின் மனதில் தவறு இருக்கிறதே தவிர, வாகனத்தில் அல்லவாம். அதேபோன்று சமயம் என்ற வாகனத்தில் தவறுகள் கூறமுடியாது. அந்த வாகனத்தைப் பயன்படுத்தும் மக்கள் இனம் செய்யும் தவறுகள் வாகனத்தின் தவறுகள் ஆகிவிடுமா?

வருணக்கல்வியினைச் சமயம் சமுதாய ஒழுங்குமேன்மை கருதிக் கற்றுக்கொடுத்தது எனப்படும்போது அதனை சாதி என்ற போர்வையில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் சதிச்செயலுக்குப் பயன்படுத்தும் சமுதாயத்தினரின் செயற்பாட்டைக் கண்டிக்கலாமே தவிர சமய அறிவின் ஒழுக்கத் திட்டத்தைக் கண்டிப்பது முறையாகாது. நாலுகுலம் படைத்தான் - அதை நாசமுறச் செய்தனர் மூடர் எனப் பாரதியாரும் சமூகத்தின் இச்செயற் பாட்டினைக் கண்டித்தாரே தவிர சமயத்திட்டத்தின் உயர்நிலை ஞானத்தை அல்ல என்பதனை எவரும் எளிதில் புரிந்து கொள்வர்.

இன்றைய கல்விமுறையானது சமய வாழ்வு, உலகவாழ்வு இவற்றிடையே பிரிவென்னும் ஒரு பள்ளம் தோண்டும் அளவிற்கு முரண்பாடுகளைக் கற்பிப்பதால் உலகின் பரிதாபமான செயல்கள் மனம் உருகாதபடி நெஞ்சத்தைக் கல்லாக்கிக் கொள்வதனாலும் மனித சமூகத்தில் ஏற்படும் தொல்லைகளினின்றும் பின்வாங்கிவிடுவதாலும் சாவுக்குப் பின்தான் மனிதனுக்கு நீதி கிடைக்கும் எனப் போதிப்பதனாலும் சமூக வாழ்வினைச் சீர்திருத்தும் வாய்ப்பே சமயத்திற்கு இல்லாமல் போய் விடுகிறது. சமூகஸ்தாபனம் என்ற கட்டிடத்தின் அடிப்படைக் காரணம் ஆத்மீக தத்துவம் தான். இந்த உறுதிப்பாட்டினை வழங்குவதற்கும் அறிவியல் அடிப்படைகளை வளர்க்கவும் தொழில் அறிவும் சமய அறிவும் தேவைப்படுகின்றன. சமயம் சமூக ஒருமைப்பாட்டை வளர்க்கும் ஒரு சாதனமாகும். மனிதர்கட்குத் தொண்டு செய்வதே சமயங்கட்குள் உயர்ந்த சமயம் என்றார் வள்ளலார். அவரது பாடல்களில் வறுமை, பசிப்பிணி அகல வேண்டும் என்பதே சமய உயர் அறிவு நிலையின் கருப்பொருளாக அமைந்துள்ளது. உண்மையான மனிதத்தன்மையினை வெளிப்படுத்துவதே சமயத்தின் இலட்சியமாகும். அத்தகைய நிறைவாழ்வு வாழ்ந்து காட்டியவர்கள் கடவுளாகப் போற்றப்பட்டனர். கிருஷ்ணர், இராமர், புத்தர், யேசுபிரான், முகமது நபி ராம கிருஷ்ணர் இவர்களின் பெயரால் சமய ஸ்தாபனங்கள் இவ்வாறுதான் உருவாகின.

## தர்க்க விதிகள்

கடவுள் என்ற கொள்கைக்கு மனச் சாட்சியே நிச்சயமான ஆதாரம் என்ற மேல்நாட்டறிஞர் கான்றும் (Kant) மனித அறிவே ஆதாரம் எனக் கொள்ளும் (Hegel) ஹெகலும் கூறுவது "ஸத்யஸ்ய ஸத்யம்" எனச் சமயம் நூல்கள் கூறும் உண்மை அறிவிற்கு புறம்பானவை அல்ல என லாம். விஞ்ஞானம் அல்லது நூல்கள் அறிவு, ஆனந்தம் அல்லது ஆத்ம விடுதலை அவைகளும் தத்தமதளவில் விளக்க வேறுபாடுகளேயாகும். கான்றின் காரண காரிய லட்சியவாதமும் (Dialectical Idealism) சரி மாக்ஸின் தத்துவமான லோகாதயவாதமும் சரி (Materialism) படிப்படியான முன்னேற்றம் உலகப் பொருட்களில் காணப்படுவதனை ஒப்புக் கொள்வனவாகும்.[28] பிரபஞ்சத்தின் இலட்சியமே உயிர்கட்கு மனதையும் விஞ்ஞான அறிவினையும் ஊட்டி முடிவில் ஆத்மானுபவமான பேரின்பத்தை அடையச் செய்வதுதான். இவற்றிலே உலகபரிணாமத்தின் வெற்றியும் கைகூடிவிடும்.

சித்தாந்த நூல்கள் கடவுட்கொள்கை

யினை நிறுவும் தர்க்கவிதிகளில் உலகின் உண்மையினையும் குறைவுடைய பொருள்களையும், மனிதவாழ்வின் ஏற்றத்தாழ்வுகளையும் எடுத்துக்காட்டி பரிபூரணமான பரம்பொருளின் தேவை இருப்பதாகக் கற்பிக்கின்றன. இந்த தர்க்க அறிவிலே நிறைவான பரம்பொருளின் மையம் nuclear எங்கும் உள்ளதாகின்றது. சிறிய அணுவுக்கும் இதற்கு விலக்கல்ல. அதனது பரிதியோ அல்லது பரிவட்டமோ (Circumference) எங்கும் நிறைந்து அறிவிற்கும் எட்டாததாகிப் பரவி நிற்கின்றது. "அணுவிற் கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்" என்ற விநாயகர் அகவலும், "அணுவிற் கணுவை ஆதிப்பிரானை" எனக் கூறும் திருமந்திரம் திருவாசகம் போன்ற தமிழ்ச் சமய நூல்கள் யாவற்றிலும் இவ்வுண்மை விரவி நிற்கின்றது. ஜீவாம்சம் என்பது எந்தவகை சூனியவாதத்திற்கும் மாறான உண்மையாகும். இந்த உள்-மை (Being) இருப்பு எல்லையில்லாத உண்மையின்மைக்கும் அப்பாற்பட்டது. "எண்ணிறந்தெல்லையிலாதான், சொற்பதம் கடந்த சொல்லோன், சித்தமும் செல்லாச் சேட்சியன்," இவை திருவாசக நூலின் கல்விச் சிந்தனையில் ஒரு சில துளிகளாகும். இதுவே பிரபஞ்சத்தின் கருவாகிய உண்மை-இந்த உண்மையின் மறுபெயர் இறைமை என்றார் காந்தியடிகள்.

பழங்காலக் கிரேக்கர் Logos என வழங்கும் பிரபஞ்சத்தின் உயிர்த்தத்துவமான ஒழுங்கும் இயக்கமும் தொழிற்படவில்லையானால் உலகமே இயக்கமில்லாத ஒரு பிண்டமாக இருக்குமென்றனர்.[29] இறைமைக்கும் பிரபஞ்ச இயக்கத்துக்குமிடையே உள்ள ஒரு இணைப்பாக இருப்பதே சமயதத்துவ அறிவியல் எனலாம். பிரபஞ்ச நடைமுறைக்குச் செல்லப்படும் விஞ்ஞானம் இயற்கையிலும் சரி உலக வரலாற்றிலும் சரி காணப்படும் எல்லா முயற்சிகட்கும் காரணம் ஆத்மாவில் இருந்து கிளம்பும் தூண்டுதல் என்பதனைப் பற்றியே தமிழ் நூற் கல்வியும் இலக்கியமாயினும், இலக்கணமாயினும், காவியமாயினும் புராணங்களாயினும், தத்துவசாத்திரங்களாயினும் சரி ஆதிமுதல் இவ்வடிப்படை உள்பொருளையே தத்தம் உட்கருவாகக் கொண்டு எழுதப்பட்டு வந்தள்ளன என்பதனையே புலப்படுத்துகின்றன எனலாம். அறிவானும் நானே அறிவிப்பானும் நானே அறிகின்ற அறிவும் நானே என்ற அற்புதத் திருவந்தாதியின் ஒரு குறிப்புப் இவ்வுண்மையினைத் தெளிவுபடுத்தப் போதுமானது.

### கர்மநியதியும் தமிழ்க் கல்வியும்

தமிழ்க் கல்வியானது இன்னுமொரு விடயம் பற்றி சமய அறிவில் தன் பங்களிப்பினைச் செய்துள்ளது. கருமநியதி பற்றிய இச்சிந்தனை மனித சமூகத்தின் மனிதாபிமான முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக இருக்கவேண்டுமென்ற உயர் நோக்கிலேயே முன்வைக்கப்பட்டுள்ளதெனில் தவறாகாது. ஒவ்வொருவரும் வாழ்வின் யாத்திரை முடியும்வரை கர்மா என்ற சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். ஒருவனது ஆசைகளும் செயல்களுமே அவனது முன்னேற்றத்தைத் தீர்மானிக்கின்றன என்பதே கர்மா என்ற சட்டமாகும். எந்நேரமும் தொழிற்படுவது மனிதனின் வாழ்க்கை நியதி. நீ தொழிலாற்றப் பிறந்தவன் - கடமையைச் செய் - முயற்சியை நிறுத்தாதே இது கீதா வாசகம். ஒருவன் வாழ்வின் ஆரம்பத்திலேயே செய்யும் முயற்சிகள் அவனது

வருங்காலத்தை நிர்ணயிக்கும். இதனையே தமிழ் நூற்கல்வியானது ஒரு பிறவியில் ஒருவனால் ஆற்றப்பட்ட செயல்களின் எதிர்விளைவுகள் அவனது அடுத்த பிறவியினைத் தீர்மானிக்கின்றன என விளக்கலாயின. "முற்பகல் பிறர்க்கின்னா செய்யின் பிற்பகல் தமக்கின்னா தாமே வரும்" என்ற குறளும் "இந்த ஊனெடுத்த பின் செய்த தீவினையாதொன்றுமில்லை - பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனம் வந்து மூண்டதுவே" எனப் பட்டினத்தார் பாடலும் "நன்றும் தீதும் பிறர்தர வாரா" என்ற புறநானூறின் அறிவுரையும், "அல்லவை செய்தார்க்கு அறம்கூற்றாகும் என்பதாம், ஊழ்வினை உகுத்து வந்தூட்டும்" என்ற சிலம்பின் கூற்றும் "முன்புரிந்த தீவினையே கொன்றிடும் - வேறு கூற்றும் வேண்டுமோ" என்னும் கந்தபுராணம் போன்ற இன்னோரன்ன நூல்கள் தரும் செய்திகள் யாவிலும் இவ்வுண்மை வலியுறுத்தப் பட்டது.

இவையனைத்திலும் தமது தற்கால நிலைமைக்கு தாந்தாமேதான் காரணம் எனத் தெரிவிக்கின்றன. இதில் கடவுளை யோ பெற்றோரையோ சமுகத்தையோ குறைகூற வேண்டிய தேவையில்லை. ஆதலால் நன்மையைச் செய்து கொண்டிருப்பவர்கள் நல்லவற்றையே அனுபவிப்பார்கள் என்ற நியதியினை "தாம் தாம் செய்தீவினை தாமே அனுபவிப்பார்" என்னும் செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ இருநிதியம் எனவும் நல்வழி என்னும் தமிழ் நூலானது எடுத்துகூறியது. இப்படியேதான் இருக்க வேண்டும் என்பது விதியின் கட்டளையல்ல. நமக்கு மட்டும் தைரியமும் தன்னம்பிக்கையும் இருந்தால் நமது வருங்காலத்தை நாமே புதுமுறையிலே அமைத்துக்கொள்ள முடியும். ஒருவரது கர்மா மாற்ற முடியாததல்ல. அவரவர் எண்ணங்களில் வஞ்சனை, சூது, பொறாமை இல்லாமல் தூய்மையாக இருந்தால் போதும். முயற்சியில் வெற்றி பெற்றாலும் பெறா விட்டாலும் பரவாயில்லை. வெளியே காணும் பலன் எப்படி இருந்தாலும் உள்ளே முன்னேற்றம் ஏற்படுவது நிச்சயம் என தமிழ் நூல்கள் கற்பிக்கின்றன. "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" எனவும் வஞ்சனைகள் செய்வாரோடி ணங்க வேண்டாம் எனவும் ஆத்திசூடி என்னும் தமிழ்நூல் கூறுவது போன்று "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என வள்ளலார் போன்ற பலரும் இக்கருத்தினை வலியுறுத்தினர். அதனால் திரிகரண சுத்தியினால் காரியசித்தி நிச்சயம் எனக் கற்பிப்பதுடன், பிறர்க்கு சேவை செய்தலையும், மனித சமுதாயத் திற்கு உதவியாகச் செயல்படுவதனையும் ஊக்கப்படுத்து முகமாகவே சமய அறிவிலே இக்கருத்தானது திட்ட வட்டமாக நிருபணம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## சமய சாதனங்களில்

சிவசின்னங்களில் திருநீறு பற்றி சமய நூல்களில் சிறப்பாகப் பேசப்படும். கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் திருநீறு பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன. மதுரையில் யானை ஒன்று நீறணிந்திருந்ததாகவும், பாண்டுரங்கம் ஆடுவோன் திருநீறுதரித்தவன்30 எனவும் வரும் செய்திகள் சமய அறிவிலே அதன் முக்கியத்துவத்தைப் பிரதிபலிப்பதாக

உள்ளது. சிவசின்னம் தரித்தல் தூய்மைக்கும், ஆரோக்கியத்திற்கும் ஆசாரத்திற்கும் உகந்ததென்பது விஞ்ஞான ரீதியிலும் கூறப்பட்ட உண்மையாகும். நெற்றியில் அணியும் நீற்றினால் மூளையில் உள்ள ஞாபக சக்திக்கான நரம்புகள் துரிதமாகச் செயல்பட வாய்ப்புண்டாகின்றதென்பதனாலேயே பழந்தமிழர் நூலும் சமயமும் இவற்றினை பொன்னேபோல் போற்றிப்புகட்டி வந்துள்ளன. ஈரத்தை உறிஞ்சும் தன்மை முகப்பவுடருக்குண்டு. அதனைக் கண்டறியுமுன் அதிகாலை குளித்துவிட்டு வந்ததும் ஈரப்பற்றை அகற்றவும் ஒரு காரணமாக திருநீறு அணிவது சிறந்ததெனப்பட்டது. திருநீற்றுக்கு அந்த சக்தி இருப்பதாக அறியப்பட்டுள்ளது.கோவிலை வலம்வருதல், வரம்வேண்டுதல், பிரார்த்தனை செய்தல் என்பன பற்றிய செய்திகளும் பழந்தமிழ்நூல்களில் காணப்படுகின்றன.[31] உடலின்கண் இதயத்திலிருந்து செல்லும் இரத்தச் சுற்றோட்ட நரம்புகள் வலப்பக்கமாக ஆரம்பித்து இடப்பக்கமாக முடிவதால் இரத்தச் சுற்றோட்டத்தினை அதிகரிக்கவும், சுறுசுறுப்பு, புத்துணர்ச்சி என்பன உண்டாகி உடல் நலம் சீரடையும் நோக்கம் காரணமாகவே ஆலயங்களில் வலப்பக்கமாக சுற்றி வருதல் வலம் வருதல் எனப்பட்டது. இவ்வாறான பல மருத்துவப் பயிற்சிகளை ஆலய விதிகளிலும், ஆசாரங்களிலும், ஆசனங்கள், யோகப்பயிற்சிகளுடாகவும் தமிழ் கல்வியானது சமயத்தின் செயற்பாட்டிற்கு நிறையவே வழங்கியிருக்கின்றது.

அனைத்து நாடுகளிலும் ஆதிகால ரிஷிகள் பிரார்த்தனையின் பலனை அறிந்திருந்தார்கள். திருமந்திரம் முதலிய பல தமிழ் நூல்களிலும் கூறப்பட்ட இக்கருத்துக்கட்கு தற்காலம் மேற்கு நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கின்றது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றிலே நம்பிக்கை வைத்திருக்கும் மேற்கு நாட்டிலிருந்தே இந்துசமயத்தின் பிரார்த்தனை தியானம் என்பவற்றின் உன்னத சக்தி பற்றி விஞ்ஞான ரீதியாகப் பரிசோதித்து இவை நிறுவப்பட்டுள்ளன. ஐக்கியராச்சியத்தில் உள்ள ஒரு மாநிலமான றோட்தீவில், விபத்து, தற்கொலை விரக்தி என்பன அதிகமாக நிலவியதால் அம் மாநில மக்களது வாழ்வினைச் சீர்படுத்த 300 பேர் கொண்ட தொண்டர் குழு ஒன்று 75 குழுக்களாகப் பிரிந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் 1978ம் ஆண்டு யூன் முதல் செப்ரம்பர் வரையும் ஒரு நாளைக்கு இருமணி நேரம் தியானத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். இதன் எதிரொலியாக வியக்கத்தக்க முறையில் தற்கொலை, வீதி விபத்து என்பன அவ்வளவுகாலமும் இருந்ததைவிட திடீரென குறிப்பிட்ட மூன்றுமாத காலத்திலே குறைந்திருந்தன. இந்த ஆய்வில் ஈடுபட்ட "வால்ட்டர் சிம்மர்மன்" என்பார் பலன் எவ்வாறிருக்கும் என நாம் அறிந்திருக்கவில்லை. மனித மனதிற்கு அவ்வளவு சக்தி உண்டென்பதனை இப்பரிசோதனை முடிவு காட்டுகின்றதென்றார். திரு. றொன்லெயிங் என்பார். இது பற்றிக் கூறுகையில் ஆதிகாலத்தில் உலகெங்கும் உள்ள மடாலயங்களில் அவை எம்மதத்தைச் சேர்ந்தவையாயினும் பிரார்த்தை அல்லது மனோசக்தி நிபுணர்கள் அங்கு இருந்திருக்கின்றார்கள். வெகு சிலரே அதன் அனுகூலத்தை உணர்ந்திருந்தனர். அவர்கள் இல்லாவிட்டால் உலகம் இன்றைய நிலையிலும் மோசமான நிலையினை அடைந்திருக்கும். சிலர் நினைப்பதுபோல அவர்கள் உலகினைவிட்டு விலகிச் செல்பவர்கள்

அல்ல. அவர்களே உலகிற்கு மிக அவசியமானதும் உபயோகமானதுமான சேவையைச் செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டார். பிறின்ஸரன் பல்கலைக்கழக உளவியல் ஆய்வாளர் டாக்டர் கறிங்ரன், நியூயோர்க் பல்கலைக்கழக புள்ளிவிபர ஆய்வாளர் டாக்டர் றொனால்ட் போன்ற வர்களும் றோட் தீவில் நடந்த பரிசோத னைக்கும், தியானத்திற்குமிடையே நெருங் கிய தொடர்பிருப்பதாகக் கூறினர்.[32]

## முடிவுரை

இவ்வாறாக நவீன விஞ்ஞான உலக மும் பாராட்டிப் பேணத்தக்க பல்வேறு விதமான சமய அறிவினைக் கொண்ட ஆழமான உண்மைத் தத்துவங்கள் தமிழ்நூற்கல்வியில் காலம் தோறும் தமிழ்ப் பண்பாட்டிற்கமைய பிரபல்ய மடைந்தே வந்துள்ளன. பல்லவர்காலம் முதல் சோழர்காலம் வரை எழுந்த தேவாரத்திருமறைகள் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள், 15ம் நூற்றா ண்டின் பின்வந்த அருணகிரிநாதர், தாயுமானார், அபிராமிப்பட்டர், இராம லிங்க வள்ளலார் போன்ற அருளாளர்க ளது நூல்கள் யாவற்றிலும் மேற்குறிப்பிட்ட செய்திகள் அனைத்தின் உட்பொருளை யும் தொகுத்துப் பார்க்க முடியும். ஈழத் திலும் நாவலரதும் அவரது மாணவர் பரம்பரையினரதும் நூல் வெளியீடுக ளிலும், பண்டிதமணி அவர்களின் சைவநற்சிந்தனைகள், சமயக் கட்டுரைகள் போன்ற அனைத்துத் தமிழ் கல்வியினை வளர்த்தற்குத் துணைபுரிந்த நூல்களிலும் சமய ஞானத்தின் மேல்வரும் சிந்தனை களையே அவைதம் அறிவுக் கருவூலங்க ளாகக் கொண்டிருக்கின்றமை புலனாகும்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங்குணம் மிக்கார்"

(பெரியபுராணம்)

## அடிக்குறிப்புகள்

1. கா. சுப்பிரமணியபிள்ளை. தமிழர் சமயம். பக். 10.
2. A.C., Bouguet,Comparative Religion, p.11.
3. கலைக்களஞ்சியம். தொகதி 4. பக். 453.
4. நற்றிணைறு 0: 7
   நெடுநல்வாடை : 86.
   திருமுருகாற்றுப்படை. 208.
5. மலைபடுகடாம் : 64-66.
   புறநானூறு : 10-11
   குறுந்தொகை : கச 0 1-2
6. குறுந்தொகை உங : 1-3
   அகநானூறு சா அ. : 7-10.
   பொருநராற்றுப்படை : 181-184.
7. தொல்காப்பியம். : பொருள் சா 0 1-2
8. பட்டினப்பாலை : 78-79
9. ஐங்குறுநூறு : ஙருஉ 1-2
   மலைபடுகடாம் 394-398
   அகம். ருஉ : 11-13. ஙOஎ 11-12.
10. புறம் உக : 2-5 புறம் ருஉ : 12-15
11. தொல் பொருள் : 5
12. முல்லை 1-3 திற்றுப்பத்து ஙஇ : 7-3
13. புறம் ருசா : 5-6
14. மதுரைக்காஞ்சி 453-456.
15. மலைபடு. 82-89
16. திருமுருகா. 151-154.
17. சிறுபாணாற்றுப்படை 96-99.
18. அகம். 181.
19. பதிற்றுப்பத்து பார்க்க.
20. பெரும்பாணாற்றுப்படை. 430-33.
21. நற்றிணை. 380. ஐங்குறுநூறு. 259.
    மலைபடுகடாம். 537-38. அகம். 35.
22. சிலம்பு. காதை 5. வரி : 11-12
    மேற்படி 14. வரி : 7-10.
    மணிமேகலை காதை 1. வரி 54-55.
23. வழிபடுதெய்வம் நின்றுபுறங்காப்ப.. (தொல். 106 செய்யுளியல்)
    கொடிநிலை. கத்தழி வள்ளி பற்றிய செய்திகள் (தொல். புறத்திணை 33).
24. சிதம்பரம். பக் 25
    திருவாலங்காட்டுப்பட்டயம்.
    அப்பர் தேவாரம் பக். 165-6.
25. மணிமேகலை. நாடுகாண் காதை. 27. வர் 80-95.
26. சபா ஜெயராசா. மனித விழுமியத்திற் கான சத்தியசாயி கல்வி. (தமிழில்) பக். 14.
27. மேற்படி. பக். 9.
28. எஸ் இராதாகிருஷ்ணன். நம்பிக்கையின் மறுமலர்ச்சி. பக்.660
29. மேற்படி. பக். 70.
30. சிலம்பு. காதை 6 : 44-45. கலித்தொகை. 97.
31. கலித்தொகை 82-84. திற்றுப்பத்து : 31.
32. *Sanathana Sarathy, Monthly Magazine, April, 1985.*

## உசாத்துணை


1. மு. வரதராசனார். திருக்குறள். தெளி வுரை. சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம். 1986.
2. பாரதியார் கவிதைகள். திருமகள் நிலை யம். சென்னை 1982.
3. லோறன்பறோஸ்.மனித விழுமியத்திற் கான சத்யசாயிக் கல்வி. (ஆங்கிலத்தில்) (தமிழாக்கம். சபா ஜெயராசா.)
4. வித்தியானந்தன் அ.. தமிழர் சால்பு. கண்டி. 1954.
5. ராதாகிருஷ்ணன் எஸ். நம்பிக்கையின் மறுமலர்ச்சி.
6. வேலுப்பிள்ளை. ஆ. தமிழர் சமய வரலாறு. பாரி நிலையம். சென்னை 1980.
7. திருமந்திர ஆராய்ச்சி. சென்னை. 1982.
8. இராசமாணிக்கனார். சைவசமய வளர்ச்சி. பாரிநிலையம். சென்னை. 1972.
9. திருமந்திரம். திருப்பனந்தாள் காசிமட வெளியீடு. 1968.
10. சுப்பிரமணியபிள்ளை. கா. இலக்கிய வர லாறு. (இரண்டாம் பாகம்). சென்னை. 1949.
11. *Gandhi.M.K., Truth is God,*
12. *Bonquet. A.C., Comparative Religion,*